தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விகாரி, மாசி 29, திருவள்ளுவர் ஆண்டு—2051

2020 மார்ச் 12, வியாழக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக."

படிப்பதற்குரிய நூல்களைக் குற்றம் இல்லாமல் கற்க வேண்டும். அதன்பிறகு கற்ற நூல்களில் அறிந்து கொண்டதற்குத் தக்கவாறு வாழ்க்கையில் அவற்றைப் பின்பற்றி நடக்க வேண்டும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 76, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சுப்ரமணி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

76—

நியாய விலைக் கடையைப் பிரித்தல்

***55012—திரு. பெ. சுப்ரமணி**:

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதி, டொக்குபோதனஅள்ளி ஊராட்சி, சிவலக்கலைகொட்டாய் நியாய விலைக் கடையைப் பிரிக்க அரசு ஆவன செய்யுமா?

[2020 மார்ச் 12

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், பாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் சிவலக்கலைகொட்டாய் பகுதியைச் சேர்ந்த 100 குடும்ப அட்டைகளையும் சேர்த்து 641 குடும்ப அட்டைகளுடன் பூவல்மடுவு பகுதிநேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில் சிவலக்கலைகொட்டாய் பகுதியில் புதிய நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சுப்ரமணி அவர்கள்.*

திரு. பெ. சுப்ரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கழகத் தலைவர் அவர்களை வணங்குகிறேன். தருமபுரி தொகுதி, டொக்குபோதனஅள்ளி ஊராட்சி, பூவல்மடுவு நியாய விலைக் கடையிலிருந்து சிவலக்கலைகொட்டாய்க்கு ஒரு பகுதிநேர நியாய விலைக் கடை வேண்டும் என்று அந்த சுற்று வட்டாரத்தில் உள்ள பொதுமக்கள் கோரிக்கை வைத்துள்ளனர். பூவல்மடுவு நியாய விலைக் கடையில் 641 குடும்ப அட்டைகள் உள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிவலக்கலைகொட்டாய் பகுதியில் 100 குடும்ப அட்டைகள் உள்ளதாகச் சொல்லியிருக்கிறார்கள். அங்கு 160–க்கும் மேற்பட்ட குடும்ப அட்டைகள் உள்ளதாக நான்* CSR *இடத்திலும்* Joint Registrar*–அவர்களிடத்திலும்* proposal *வழங்கியுள்ளேன். பூவல்மடுவு நியாய விலைக் கடைக்குச் செல்ல வேண்டுமென்றால் சுமார் 2 கிலோ மீட்டர் தூரம் நடந்து செல்ல வேண்டிய சூழ்நிலையில் அந்தப் பகுதி மக்கள் இருக்கிறார்கள். ஆகவே, அங்கே 160–க்கும் மேற்பட்ட குடும்ப அட்டைகள் உள்ளதால் அந்தப் பகுதி மக்களின் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.*

2020 மார்ச் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்தப் பகுதியில் இரண்டு பகுதிநேர நியாய விலைக் கடைகள் மற்றும் தாய்க் கடையையும் சேர்த்து 3 நியாய விலைக் கடைகள் உள்ளன. இரண்டாவது, குடும்ப அட்டைகளும் குறைவாக இருக்கின்றன. நேற்றையதினம் துறையினரிடம் பெற்ற புள்ளிவிவரங்களின்படி, பூவல்மடுவு பகுதிநேர நியாய விலைக் கடையில் 500 குடும்ப அட்டைகளுக்குமேல் உள்ளன. அது கிராமப்புறக் கடையாக இருப்பதால் அதனை முழுநேர நியாய விலைக் கடையாக மாற்றி, இதைப் பகுதிநேர நியாய விலைக் கடையாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறோம். அதே நேரத்தில், இங்கே மாண்புமிகு மக்கள் பிரதிநிதிகள் அனைவருமே அதிகமான பகுதிநேரக் கடைகள் வேண்டும் என்ற கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கனிவான பார்வைக்கு வைக்கிறார்கள். மக்கள் நலன்தான் இந்த அரசுக்கு முக்கியம். எனவே, அனைத்து மக்களுக்கும் இந்த அரசினுடைய நியாய விலைக் கடைப் பொருட்கள் தங்குதடையின்றி உரியவர்களுக்கு சென்றடைய வேண்டும் என்ற அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்கள் துறைக்கு நல்லதொரு ஆலோசனையை வழங்கியிருக்கிறார்கள். அதன் அடிப்படையில், துறை ரீதியாக ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நிச்சயமாக விரைவில் நிறைவேற்றிக் கொடுக்கப்படும். ஏனென்றால், மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல, அங்கிருக்கின்ற கடைக்கு அந்தப் பகுதி மக்கள் 3 கிலோ மீட்டர் மற்றும் அதற்கு மேலும் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. எனவே, அதனைக் கருத்திற்கொண்டு அந்தப் பகுதியில் ஒரு பகுதிநேர நியாய விலைக் கடையோ அல்லது ஒரு நகரும் கடையோ கொண்டுவருவதற்கு மாண்புமிகு அம்மாவின் அரசு உறுதியாக நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சுப்ரமணி அவர்கள்.*

[2020 மார்ச் 12

திரு. பெ. சுப்ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வது உண்மைதான். நானும் துறை அதிகாரிகளிடத்தில் விசாரித்தபொழுது பகுதிநேரக் கடையாக இருக்கும் நியாய விலைக் கடையை முழுநேர நியாய விலைக் கடையாக மாற்றுவதற்கு அனைத்து ஏற்பாடுகளும் செய்திருக்கிறோம் என்று தெரிவித்தார்கள். ஆகவே, விரைவிலே அந்த இடத்தில் ஒரு பகுதிநேர நியாய விலைக் கடை வழங்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

அடுத்து, தடங்கம் கிராமத்திலுள்ள நியாய விலைக் கடையில் 812 குடும்ப அட்டைகள் உள்ளன. அது என்னுடைய கிராமம். தோக்கம்பட்டி, கக்கன்ஜிபுரம், தோக்கம்பட்டி மேட்டுக்கொட்டாயிலிருந்து வருகின்ற பொதுமக்கள் தேசிய நெடுஞ்சாலை மற்றும் சேலம்–பெங்களூரு செல்லும் சாலைகளைக் கடந்துதான் தடங்கம் கிராமத்திற்கு வர வேண்டும். அந்தப் பகுதியிலே 197 கார்டுகள் உள்ளன. அனைத்து கார்டுகளுக்குண்டான proposals-ம் துறை சார்ந்த அதிகாரியிடத்திலே வழங்கியுள்ளோம். ஆகவே, அந்தத் தோக்கம்பட்டி கிராமத்திற்கு ஒரு புதிய நியாய விலைக் கடை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–05

அதேபோன்று, அதியமான்கோட்டை ஊராட்சி, ஏலகிரியான்கொட்டாயில் 700–க்கும் மேற்பட்ட குடும்ப அட்டைகள் உள்ளன. ஜீவா நகரில் 170–க்கும் மேற்பட்ட குடும்ப அட்டைகள் உள்ளன. எனவே, அந்தக் கடையிலிருந்து பிரித்து ஜீவா நகருக்கு ஒரு பகுதிநேர நியாய விலைக் கடை திறக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, மிட்டஅள்ளி ஊராட்சி, கொமத்தம்பட்டி கிராமத்திலிருந்து வத்தல்மலை அடிவாரம் வரை இருக்கின்ற பொதுமக்கள் எல்லாம் கொமத்தம்பட்டியில் உள்ள நியாய விலைக் கடைக்குத்தான் வர வேண்டும். அது மலை சார்ந்த பகுதி. ஏறத்தாழ 160–க்கும் மேற்பட்ட குடும்ப அட்டைகள் அந்த வத்தல்மலை அடிவாரத்தில் இருக்கின்றன. ஆகவே, கொமத்தம்பட்டி கிராமத்திலிருந்து, அந்த நியாய விலைக் கடையினைப் பிரித்து, வத்தல்மலை அடிவாரத்திற்கு ஒரு

2020 மார்ச் 12]

பகுதிநேர நியாய விலைக் கடையை வழங்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, சட்டமன்ற உறுப்பினருடைய கோரிக்கைகளை, இதுபோன்ற மக்கள் நலன் சார்ந்து வைக்கின்ற கோரிக்கைகளை ஏற்றுத்தான் கடந்த 2011 முதல் 29–2–2020 வரை ஏறத்தாழ 676 முழுநேர நியாய விலைக் கடைகளையும், 1,752 பகுதிநேர நியாய விலைக் கடைகளையும், ஆக மொத்தம் 2428 நியாய விலைக் கடைகளை மக்களுடைய பயன்பாட்டுக்காக இன்றைக்கு திறந்திருக்கிறது. ஆக, முழுநேர நியாய விலைக் கடைகள் மட்டும் 23,486, பகுதிநேர நியாய விலைக் கடைகள் 9,479 என 32,965 கடைகள் கூட்டுறவுத் துறையால் மட்டும் இன்றைக்கு நடத்தப்படுகின்றன. ஆனால், 1964ஆம் ஆண்டில் வெறும் 4,441 நியாய விலைக் கடைகள் மட்டும்தான் இருந்தன. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். முதலமைச்சராக வரும்வரை, 1978 வரைக்கும் 4,441 கடைகள்தான் இருந்தன. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக வந்த பிறகுதான், ஒரு கிராமத்திற்கு ஒரு கடை என்ற அளவில் 15,501 நியாய விலைக் கடைகளைக் கொண்டு வந்தார்கள். கார்டுகளை எல்லாம் கணக்கில்கொள்ளாமல், அனைத்து கிராம மக்களும் பயனடைய வேண்டுமென்று இதனைக் கொண்டு வந்தார்கள்.*

அதற்கடுத்து, படிப்படியாக இன்றைக்கு கூட்டுறவுத் துறையின் மூலமாக 32,965 கடைகள் வந்திருக்கின்றன. இருந்தபோதிலும், இன்றைக்கு அனைத்து மாண்புமிகு உறுப்பினர்களும் அவர்களின் பகுதியில் நியாய விலைக் கடைகள் வேண்டும், கடைகளைப் பிரிக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். அதற்கென்று சட்ட விதிகள் இருக்கின்றன. என்னதான் கூட்டுறவுத் துறையின்மூலம் அனுப்பினாலும், நம்முடைய மாவட்ட ஆட்சித் தலைவருடைய பரிந்துரை இருந்தாலும், விதிகளுக்குட்பட்டு, சென்னையில்

உள்ள உணவுப் பொருள் வழங்கல் ஆணையாளருடைய உத்தரவு இருந்தால்தான் புதிய நியாய விலைக் கடையைத் திறக்க முடியும்.

சட்ட விதிகள் இடம் கொடுக்காததால் நியாய விலைக் கடைகளைத் திறக்க இயலாத சூழ்நிலை இருக்கிறது என்பதை அறிந்துதான் துறை ரீதியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் எடுத்துச்சொல்லியதன் அடிப்படையில், இப்பிரச்சினைகளைக் களைகின்ற வகையில் இப்போது நகரும் கடைகளை அமைப்பதற்கு அம்மாவினுடைய அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. அதிவிரைவிலே நல்ல செய்தி மாமன்றத்தில் உள்ள எல்லா உறுப்பினர்களும் மகிழ்ச்சியடைகின்ற வகையில் துறையின் மானியக் கோரிக்கையின்போது அறிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.

முனைவர் கோவி. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய இயக்கத்தின் தலைவர், எங்களை இயக்குகிற தலைவர், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை வணங்குகிறேன். பொதுவாக, ரேஷன் கடைகளில், பொதுமக்கள் பயன்படுத்துகிற அரிசி மற்றும் உணவுப் பொருட்கள் நூற்றுக்கு 65 முதல் 70 சதவீதம் வழங்கப்படுவதாக அறிகிறேன். கிராமப்புறத்தில் என் தொகுதியில் கூட, ஒருசில பொதுமக்கள் சென்று கேட்கிறபோது, M.L.A., M.P. மூலமாக உங்கள் மேலதிகாரியை அணுகுங்கள் என்று சொல்கிறார்கள். எனவே, 100-க்கு 90 சதவிகிதம் குறையாமல் உணவுப்பொருட்களை வழங்க வேண்டும். மாதம் 30 நாட்களில், எல்லா நாட்களிலும் உணவுப் பொருட்கள் கொடுக்கப்படுவதில்லை. 30 நாட்கள் பணி நாட்கள். சனி, ஞாயிறு போக என்று பார்த்தாலும்கூட 15 நாட்களாவது கொடுக்கலாம். 3 நாட்கள், 4 நாட்கள் மட்டும்தான் நியாய விலைக் கடைகளில் உணவுப்பொருட்கள் வழங்கப்படுகின்றன. எனவே, உணவுப்பொருட்களை வழங்குகிற நாளை கூடுதலாகவும், உணவுப்பொருட்களுடைய அளவை 90 சதவிகிதம் குறையாமலும் கொடுக்க அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

2020 மார்ச் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–10

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக முனைவர் கோவி. செழியன் அவர்கள் நல்ல கருத்து சொல்பவர். இதுபோன்று நியாய விலைக் கடைகளில் அத்தியாவசியப் பொருட்கள் கொடுக்கப்படவில்லை என்று தயவுசெய்து பேச வேண்டாம். யாருக்காவது, எந்த ரேஷன் கார்டுக்காவது உரிய பொருள் வழங்கப்படவில்லையென்று ஏதாவது ஒரு கடையைச் சுட்டிக்காட்டுங்கள். அப்படி யாரையாவது சுட்டிக்காட்டினால், உறுதியாக அவர்மீது நடவடிக்கை எடுக்கப்படும். இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசில் ஒவ்வொரு கடைக்கும் உணவுப்பொருள் நகர்வு 5 சதவிகிதம் கூடுதலாக செய்யப்படுகிறது. ஒரு சிலபேர் வெளியூர் சென்றிருப்பார்கள். வெளியூர் சென்றவர்கள் அந்த மாதம் வாங்காமல் விட்டிருப்பார்கள். அடுத்த மாதம் அவர்களுக்குக் கொடுக்கும்போது, பற்றாக்குறை வந்துவிடக் கூடாது என்பதற்காக அவ்வாறு செய்யப்படுகிறது. முன்பெல்லாம் கடையில் உள்ள விற்பனையாளர் நினைத்தால் கொடுக்கலாம். அதுபோன்ற நிகழ்வுகளில் சில தவறுகள் எல்லாம் நடந்தன. இப்போது அவ்வாறு நடப்பதற்கான வாய்ப்பே கிடையாது. தற்போது* point of sales-*ல்* machine *வந்துவிட்டது. அவர்கள்* smart card–*ஐ காண்பித்து, அதன்மூலமாகத்தான்பொருட்கள் வழங்கப்படுகின்றன. இரண்டாவது, யார் உரிய* card *வைத்திருக்கிறார்களோ, அவர்களுக்கு* sms alert *சென்று விடுகிறது. வாங்காதவருக்குப் போயிருந்தால், உடனே அவர் வந்து* complaint *செய்யலாம். அதனால் தயவுசெய்து, தவறான தகவலை இந்த மாமன்றத்திற்குத் தெரிவிக்க வேண்டாம். யாராவது சொல்கிறார்கள் என்பதற்காக இந்த மாமன்றத்தில் தவறான தகவல்களைச் சொல்லவும் கூடாது. எந்த இடத்திலும், எந்தக் கடைக்கும், எந்தவிதமான குறைபாடும் இல்லாமல் அனைவருக்குமே பொருட்கள் சென்றடைகின்றன என்பதை இந்த மாமன்றத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்*

[2020 மார்ச் 12

வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ.செ. வில்வநாதன் அவர்கள்.*

திரு. அ.செ. வில்வநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத் தலைவர், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை வணங்குகிறேன். எனது ஆம்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பேரணாம்பட்டு ஒன்றியம், சின்னவரிக்கம் வேளாண்மை கூட்டுறவுச் சங்கத்தின்கீழ் இயங்கும் மிட்டாளம் ஊராட்சி, குட்டகந்தூர் நியாய விலைக் கடையிலிருந்து மலைவாழ் மக்கள் வாழ்கின்ற மலைப் பகுதியில் இருக்கின்ற பைரபல்லி பகுதிக்கு பகுதிநேர நியாய விலைக் கடையைப் பிரித்துத் தர வேண்டும் என்றும், அதேபோன்று மாதனூர் ஒன்றியத்திற்குட்பட்ட சாணாங்குப்பம் வேளாண்மை கூட்டுறவுச் சங்கத்தின்கீழ் இயங்கும் நாயக்கனேரி ஊராட்சி, பனங்காட்டேரி நியாய விலைக் கடையிலிருந்து காமனூர்தட்டு மலைவாழ் மக்கள், மலைப்பகுதிகளில் வாழ்கின்ற மக்கள் இருக்கின்ற பகுதியி ல் ஒரு பகுதிநேர நியாய விலைக் கடையைத் திறக்க வேண்டும் என்றும் கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் நான் கோரிக்கை வைத்தேன். அதனை சிறப்பு அனுமதியுடன் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆலோசித்து, ஆய்வு செய்து திறப்பதாகத் தெரிவித்தார்கள். பொது மக்கள் 4 கிலோ மீட்டர் தூரம் சென்று மிகவும் அவதிப்படுகின்ற காரணத்தினாலும், மலைவாழ் பகுதியான இவ்விரு பகுதிகளில் மக்கள் வாழ்கின்ற காரணத்தினாலும், மலைப் பகுதியில் இருக்கின்ற காரணத்தினாலும் சிறப்பு அனுமதியுடன் இந்தக் கூட்டத் தொடரிலேயே அதனை அறிவிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

2020 மார்ச் 12]

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னது உண்மைதான். காமனூர்தட்டு பகுதிக்கு ஏற்கெனவே நான் சென்றிருந்தேன். நாடாளுமன்றத் தேர்தல் பணிக்காகப் பொறுப்பேற்றிருந்தபோது, மாவட்ட ஆட்சித் தலைவருடன் நான் அங்கு சென்றிருந்தேன். இரண்டு மலைகளைத் தாண்டி அந்த மக்கள் அங்கு சென்று வருகிறார்கள். எனவே, சிறப்பினமாகக் கருதி அங்கே நியாய விலைக் கடையை அமைக்க வேண்டும், ஏற்கெனவே கடை கட்டியிருப்பதைத் திறக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். அது விரைவாகத் திறக்கப்படும். அதில் மாற்றுக் கருத்து ஏதுமில்லை. சில சட்டச் சிக்கல்கள் இருக்கின்றன. இரண்டாவது, இன்னொரு கடை பைரபல்லிக்குக் கேட்டீர்கள். மேலும், நகரும் கடையின் மூலமாகவும் மக்கள் வாங்குகின்ற பொது விநியோகத் திட்டப் பொருட்கள் தங்குதடையின்றி அந்தப் பகுதி மக்களுக்குச் சென்றடைய வேண்டும். சில சட்ட விதிகளைச் சொன்னால்கூட, அதை நீங்கள் தவறாக நினைப்பீர்கள். ஏனென்றால், உங்கள் ஆட்சிக் காலத்தில் நீங்கள் கொண்டுவந்த சட்ட விதிகள்தான். 150 cards, 500 cards, 1000 cards இருக்க வேண்டும்; இவையெல்லாம் நீங்கள் கொண்டு வந்ததுதான். (குறுக்கீடு) சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு) அதைத்தான் நான் சொல்கிறேன். (குறுக்கீடு) அதைத்தான் நான் வேண்டாம் என்று சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) நான் சொல்கிற பதிலிலேயே சொல்லிவிட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்ட விதிகள் இருந்தாலும் சிறப்பினமாகக் கருதி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கச் சொல்லியிருக்கிறார்கள். நிறைய இடங்களில் 50 cards, 60 cards, 4 கிலோ மீட்டர், 3 கிலோ மீட்டர், ஏரி, குளங்கள், ஆறுகள், நெடுஞ்சாலை என சாலைகள் எல்லாம் வருகின்றன. இதையெல்லாம் கடந்து போகும்போது உயிரிழப்பு ஏற்படுகிறது. எனவே, இதையெல்லாம் கருத்தில்கொண்டு, நாம் கொடுக்கும் பொருட்கள் அந்தப் பகுதி மக்களுக்குச் சென்றடைய வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில், சிறப்பாக, எல்லா உறுப்பினர்களும் மகிழ்ச்சியடைகின்ற

வகையில் அறிவிப்பு விரைவில் வரும். துறை ரீதியாக ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்கள்; அறிவிப்பு விரைவில் வரும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 77, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். செல்வராசு, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

77—

பள்ளிக்குக் கட்டடம்

***6114—திரு. எம். செல்வராசு:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, பாப்பாப்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) முசிறி தொகுதி, பூலாஞ்சேரி ஊராட்சி, பாப்பாப்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் ஏற்கெனவே போதுமான அளவில் 4 வகுப்பறைகள் கொண்ட இரண்டு கட்டடங்கள் பயன்பாட்டில் உள்ள நிலையில், கூடுதல் கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.